reduced outlay suggested by the Standing Finance Committee, the work was deleted from the final list of works approved. The proposal is under the active consideration of the Government.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுகிற முறை...............(மணியடிக்கப்பட்டது).

Formation of road near Karumanjarai Pond.

*412 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in laying the Panchayat Union road near Karumanjarai Pond, Uthukuli, even though instructions in this regard have already been issued by the District Collector?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கருமாஞ்சேரியின் அருகே உள்ள குட்டையின் கரை மேல் சாலை போடுவது சிக்கன மற்றதோடு இடைஞ்சலாகவும் இருப்பதால் குட்டையின் அருகே சாலை போடுவதற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

Cases involving Co-operative Societies.

*443 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the police have taken up investigation into the affairs of a number of (1) Co-operative Land, (2) Co-operative Credit Banks during 1971-72; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) 1971-72-ஆம் ஆண்டில் விவசாய வங்கி, கடன் வழங்கு சங்கங்கள் ஆகியவற்றின் வழக்குகளும், கூட்டுறவு நிலவள வங்கிகளில் 6 வழக்குகளும் ஆக 133 வழக்குகள் காவல் துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, சில வழக்குகள் இன்வஸ் டிகேஷன் செய்வதற்கு வெகு காலதாமதம் ஏற்படுவதால் ஒரு கால வரையறை குறிப்பிட்டு இன்வஸ்டிகேஷன் செய்வதற்கான நட வடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

1973 மார்ச் 20]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்படிப்பட்ட வழக்கு களைப் புலனாய்வு செய்வதற்கு தனி விங் இருக்கிறது. அவர்கள் மிக ஊக்கமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் துரிதப் படுத்த வேண்டுமானால் அதைப் பெரிதாக்க வேண்டியிருக்கும். இப்போது போதிய அளவு வேகமாக போய்க்கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவரவர்களே, மாவட்டந் தோறும் எத்தனை சங்கங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்ற விவரத்தை தர முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மாவட்டந்தோறும் எத்தனை என்பதற்குத் தனியாகக் கேள்வி எழுப்புவதாக இருந்தால் அதனுடைய புள்ளி விவரங்களை அச்சிட்டு மேஜைமீது வைப்பதற்கு நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, சாதாரணமாகப் புலனாய்வு செய்வதற்கு சராசரி எத்தனை ஆண்டுகள் எடுக்கப் படுகின்றன? புலனாய்வு முடிந்து, வழக்குகள் தொடர காலதாமதம் ஏற்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அம்மையார் அவர்கள் வழக்கறிஞர். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். புலனாய்வு செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பது அந்த வழக்கை ஒட்டியது. சில நேரங்களில் ஏறத்தாழ 1,000-க்கு மேற்பட்ட சாட்சிகள் கூட இருக்கின்றனர். அவர்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க பல ஆண்டுகள் ஆகின்றன. சாதாரணமாக ஒரு சில மாதங் களில் அந்தப் புலனாய்வு முடிந்து உடனடியாக வழக்குகள் தொடரப் படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த ஆண்டு எத்தனை வழக்குகள் புலனாய்வு செய்யப்பட்டு, வழக்குமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, வினா 1971–72-ஆம் ஆண்டு பற்றியது. அதற்குப் பிறகு 72–73-ல் என்ன என்பதைப் பற்றி தனியாக வினா எழுப்பினால் புள்ளி விவரங்கள் தர முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த கடனாய்வு (சிரிப்பு), புலனாய்வுக்கு எடுத்துக்கொண்ட வழக்குகளில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சொசைடியில் தருமபுரி சொசைடி, பொட்னேரி சொசைடி இரண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இம்மாதிரியான புலனாய்வு செய்வதில் எவ்வளவு வழக்குகள் நிருபணம் ஆகி இருக்கிறது? வழக்குத் தொடரத் தகுதியுள்ள வழக்குகள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த வினா எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றியும் அல்ல. அவர்கள் சொல்வதுபோல் கடன் வழங்கும் சங்கங்கள், அல்லது புலனாய்வு பற்றிய விவரங்களைப்பற்றித் தனி வினா போடப்படுமானால், அதிலே எத்தனை வழக்குகளில் தீர்ப்பாகி இருக்கிறது, எத்தனை இன்னும் புலனாய்வில் இருக்கின்றன என்று சொல்ல முடியும். அது நீண்ட பட்டியலாக இருப்பதால், அதை அச்சிட்டு மேஜைமீது வைக்கத் தயாராக இருக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : May I know what is the total amount involved in this case?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Even the information about the total amount, Sir, I do not have readily on hand. But if a separate question is put. I will be able to say districtwar or societywar the amount involved.

மதுரை மண்டலப் பகுதியில் கதர் விற்பனை

* *444 வினா.*—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70, 1970–71, 1971–72 ஆண்டுகளில், மதுரை காதி மண்டலப் பகுதியில் கதர் கடனாக விற்றதில் பாக்கியுள்ள தொகை எவ்வளவு?

(இ) இதில் வசூலிக்க முடியாது என்று தள்ளுபடி செய்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : **(அ)** ரூ. *30,09,038-21.*

(இ) ஏதுமில்லை.